புகார் இருக்கிறது. எத்தனை சதவிகிதம் எந்த உரங்களைக் கலந்து போடவேண்டுமோ அப்படிப்பட்ட வகையிலே உழவர்கள் முழு அளவையையும் போடவில்லை, அதனால் தான் அதிகப்படியான விளைச்சல் காணவேண்டியிருந்தாலும், போதுமான உரம் சொல்லிக் கொடுக்கிற அளவுக்குப் போடாத காரணத்தினால், இன்னும் விளைச்சல் குறைவாக இருக்கிறது என்பதை அதிகாரிகள் அவ்வப்பொழுது அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள்.

உணவுப் பொருள் வழங்குத்துறை

*** 256 வினா—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், உணவு, தானிய மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தக்கூடிய செயற்குறிப்பு ஏதாவது தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா என்பது. அதற்கு இல்லை என்று பதில் சொன்னேன். மூலக்கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

*** 257. Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR :** Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether most of the staff of the Accountant General's Office working at the Office of the Commissioner of Civil Supplies have been withdrawn; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலகத்தில் (கணக்குப்பிரிவில்) தமிழ்நாடு கணக்காய்வாளர் அலுவலகப் பணியாளர்களில் சிலர் முகமை அடிப்படையில் பணியாற்றி வந்தனர். அவர்கள் பதவிக்காலம் முடிந்தபின் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். அகௌண்டெண்டு ஜெனரல் ஆபீசிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த சிப்பந்திகள் குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் என்ற ஒரு நியதியில் எடுத்துக்கொள்ளப்பட்டார்களா ? இல்லை, அவர்கள் இந்த டிபார்ட்மெண்டு இருக்கிற வரைக்கும் வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குறிப்பிட்ட கால வரம்புக்கு உட்பட்டு எடுக்கப்பட்டு, காலம் முடிந்தபின் திருப்ப அனுப்பப்பட்டார்கள்.

திரு. கே. விநயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் வேலைசெய்யும் அகௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸ் சிப்பந்திகளை அவர்கள் வாபஸ் பெற்றுவிட்டார்களா? நாம் டீ—கண்ட்ரோல் செய்ததினாலே சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலிருந்து பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அகௌண்டன்ட் ஜெனரல் ஆபீசிலிருந்து வந்தவர்கள் அனைவருமே திரும்ப அனுப்பப்படவில்லை. 23 பேர்கள்தான் திரும்ப அனுப்பப்பட்டார்கள். இன்னும் நாலைந்து பேர்கள் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறார்கள். டீ-கண்ட்ரோல் செய்ததன் விளைவாக பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். தனிக் கேள்விகேட்டால் பதில் சொல்லப்படும்.

தமிழ்நாடு மத்திய சிறைச்சாலைகள்

258 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டிலுள்ள மத்திய சிறைச்சாலைகளை புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும், அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்குப் பின்னால், நமது அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் மத்திய சிறைச்சாலைகளில், சிறைச்சாலைச் சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனிக் கேள்வி போடவும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே இருக்கிற மத்திய சிறைச்சாலைகள் எல்லாம் வெள்ளையர் ஏகாதிபத்திய காலத்தில் கட்டப்பட்ட மிகப் பழைமையான கட்டிடங்களாகும். ஆகவே, இந்தக் கட்டிடங்களைப் புதுப்பிக்க அரசு முடிவு செய்யுமா? பாளையங்கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டு வருவதுபோல, மற்ற இடங்களிலும் மாறுதல் செய்து, சில புதிய திட்டங்களை அமல் நடத்துமா?